

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## அவர் நம் கையைப் பிடித்து’ நடத்தும் ரகசியம்!

‘திராட்சை செடியாகிய’ கிறிஸ்துவோடு ‘கொடியாய்’ நிலைத்திருப்பது பாக்கியம்! ஏனெனில் “என்னில் நிலைத்திருப்பவனிடத்தில் நானும் நிலைத்திருப்பேன்!” என பொய்யுரையாத கிறிஸ்து வாக்குத் தந்துள்ளார்! (யோவான் 15:4).

ஓர் ‘கொடியாக’ கிறிஸ்துவையே நம்பி, ‘செடியாகிய’ அவரையே சார்ந்து சார்ந்து வாழ்பவன் முதலாவதாய் கண்டடையும் கனிதரும் வாழ்க்கை என்ன தெரியுமா? இனி அவர் நம்மில் நிலைத்திருப்பார்! என்ற ஆச்சரியம் தான்! ஆம், அவரது கையைப் பிடித்து, கையைப் பிடித்து நம்பி வாழ்ந்தவன் எவனோ.... அவனது கொடிய இக்கட்டு நேரத்தில் “அவரே தன் கரம் நீட்டி அவன் கையைப் பிடித்து” நடத்துவார்! அல்லேலூயா.

_tr

பெட்டகம் 23 | நவம்பர் 2021 | பரல்கள் 11



# ‘பூரண அர்ப்பணத்தை’ சார்ந்தே பரிசுத்தாவி அபிஷேகம்!

பூரண அர்ப்பண வாழ்க்கை என்பது, தேவன் வைத்திருக்கும் ஓர் தராசு எடை மேடையைப் போன்றதாகும்! இந்த தராசின் இணைப்பு பரலோகத்தோடு தொடர்புடையதாகும். அந்த தொடர்பு, ஒரு உத்தம விசுவாசிக்கு தேவன் தரும் “அபிஷேகம்” (Anointing) என்ற சொல்லொண்ணா ஆசீர்வாதத்தின் பொக்கிஷ மேயாகும். இந்த பூரண அர்ப்பண தராசு, ஒருவனின் முழுமையான, துல்லிய எடையை காட்டும் ஓர் ஆவிக்குரிய மெஷின் என்றே கூறவேண்டும்! ஆகவே, ஒருவன் பரத்தின் ‘அபிஷேகத்தைப்’ பெறவேண்டுமென்றால், **அவனுடைய முழு எடையும் (பூரண அர்ப்பணம்) அந்த தராசில் வரவேண்டியது மிகமிக அவசியம்.** ஒரு மனிதனின் எடை 61.5 கிலோகிராமாக இருந்தால், அவன் அந்த தராசில் 61 கிலோ கிராம் எடையைப் பதிவுசெய்தால், அதினால் ஒரு பிரயோஜனமும் கிடையாது. நீங்கள் ஒருவேளை .5 மாத்திரம்தானே பதிவாகவில்லை என கூறுபவர்களாயிருந்தால், அவ்வாறு கூறிக் கொண்டேயிருங்கள்.... பரத்தின் ‘வருகை’ எதுவுமே சம்பவிக்காது! ஒருவனின் “ஜீவிய-எடை” எவ்வளவு என்பது தேவனுக்குத் துல்லியமாய் தெரியும். பரத்தின் ஆசீர்வாதத்தை தேவன் முழுமையாக தர விரும்புகிறபடியால், அவர் தன்னிடம் வருபவன் “முழுமையாய்” தன்னை தரவேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்!! *-Ed*


**2021 ‘பரலோக பொக்கிஷங்கள்’ – வருட சந்தா ரூ.150.00**

சந்தா புதுப்பிக்காதவர்கள் **டிசம்பர் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125.00** அனுப்புங்கள். அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **‘புதிது’** என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்!**
**அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## வெறுப்பின் வேர், ஒழியட்டும்!

*பிரான்ஸிஸ் அசிசி என்ற பரிசுத்தவானோடு நெருங்கி ஜீவித்த ஜுனிபர் என்ற அருமையான சகோதரன் மலைப் பிரசங்கத்தின் ஆவியையும் அதில் மறைந்திருக்கும் சத்தியங் களையும் மிகவும் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார். தன் சொந்த ஜீவியத்தில் அவர் அனுபவித்ததையே வார்த்தையாக கூறினார், "பூமிக்குரிய யாதொன்றையும், அன்பின் பிரமாணத்தைப் பூர்த்திசெய்வதற்கு 'பயன்படுத்தாத' பட்சத்தில், உங்களின் பூமிக்குரிய யாவும் வீண்!" அதாவது பணத்தையும் உலகப்பொருட்கள் அனைத்தையும் கரம் விரித்துக் கொடுப்பதற்கு ஆயத்தமாயிருக்கும்பொழுது மாத்திரமே, இவ்வுலகப் பொருட்களுக்கு நித்தியத்திற்குரிய முக்கியத்துவம் உண்டாகிறது. உதாரணமாக, நீங்கள் சௌகரியமாய் படுத்துறங்க வைத்திருக்கும் கட்டிலை, பிறரும் தூங்கி இளைப்பாறிட தரும்போதுதான், அப்பொருளுக்கு முக்கியத்துவம் கிட்டுகிறது! இப்போது இந்த 'கட்டில்' அன்பின் பிரமாணத்துக்கு ஊழியம் செய்கிறதே! தேவனுக்கே மகிமையுண்டாவதாக!*

*"உலகப்பொருட்கள் அனைத்திற்கும் ஒரு முக்கியத்துவமும் தரவில்லை" எனக் கூறுவது மிக பெலஹீனமான அறிக்கையாகும். உலகப்பொருட்களைக் குறித்த மதிப்பை சரியாக கோடிட்டு காட்டுவதற்கு ஞானமுள்ள அப்போஸ்தலன் எழுதிய வார்த்தையே ஏற்றதாயிருக்கிறது: "நான் எல்லாவற்றையும் நஷ்டமென்றும்..... குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலி.3:8). பார்த்தீர்களா! உலகப்பொருட்கள் (குப்பைத் தொட்டியில் போடும் அளவிற்கு) ஒன்றுக்கும் உதவாதவைகள்!*

**இன்று ஜனங்கள் பாவத்தினிமித்தமே ஆவிக்குரிய குருடர்களா யிருக்கிறார்கள். எனவேதான் இவர்கள் உலகப் பொருட்களை மேன்மையாக எண்ணி அவைகளை வாரி சுதந்தரித்திட பேராவல் கொண்டு திரிகிறார்கள். இவ்விதம் இவர்கள் உலகப்பொருட்களை மேலானதாகவும், விலை மதிப்பிற்குரியதாகவும் 'காண்கிறபடியால்' அவைகளை அடைந்துவிடுவதற்கு பாவம் செய்யவும் துணிந்து விடுகிறார்கள்!**

இதனிமித்தமே இவர்கள் பொய்சொல்லவும் ஏமாற்றவும் கோபிக்கவும் செய்கிறார்கள்! மேலும் இதனிமித்தமே இவர்கள் பிறருக்கு ஒருபோதும் பகிர்ந்தளிப்பதோ அல்லது கொடுத்து உதவுவதோ கிடையாது. மேலும், திரும்ப கொடுக்க முடியாமல் தத்தளிக்கும் தனக்கு கடன்பட்டிருக்கிறவரின் கடனை எளிதில் தள்ளுபடிசெய்யவும் இவர்களால் முடிவதில்லை!

இன்னும் அதிகமாய், முறுமுறுக்கவும், வெறுப்போடு நடந்து கொள்வதற்கும் 'இவர்களின் ஆவிக்குரிய குருட்டாட்டமே' காரணமாயிருக்கிறது! மேலும், வெகு சீக்கிரத்தில் மனம் புண்படுகி றார்கள்! தங்களை இவர்கள் மேன்மையாக எண்ணுகிறபடியால், தாங்கள் தவறாய் நடத்தப்படுவதாகவும் எண்ணிக் கொள்ளுகிறார்கள்! ஏனெனில் ஒருவன் கனப்படுத்தப்படுவதையும், பிறரின் கவனத்திற் குரியவனாவதையும், பிறரால் ஏற்றுக்கொள்ளப்படுவதையும், அன்பாய் நடத்தப்படுவதையும் கண்டு, ......ஏதோ மகா மேன்மைக் குரியதாகவே அவைகளை எண்ணிக்கொள்ளுகிறார்கள். யார் இவர்கள்? சுயத்தின் மொத்த வடிவமான ஆவிக்குரிய மதியீனர்கள்!!

**இவ்வித ஆவிக்குரிய குருட்டாட்டத்தினாலேயே, இன்று ஜனங்கள் தங்கள் எதிர்பாலரை (opposite sex) 'விண்ணகமோ' என வாய்பிளக்க மயங்கி இச்சை கொண்டு பார்க்கிறார்கள்! இவர்களின் இந்த தவறான கண்ணோக்கினால் விளையும் பாவங்களுக்கு எண்ணிக்கையே இல்லை!**

அந்தகாரமான இவ்வித காலத்தில், நாம் உண்மையாகவே தேவனுடைய வார்த்தையை கனம்செய்து விசுவாசித்துவிட்டால், எல்லா பாவங்களும் சூரியனைக் கண்ட பனிபோல மாயமாய் மறைந்தேபோகும்! இவ்விதம் உண்மையாக விசுவாசிக்கிறவர்களுக்கே தேவன் தன்னையும்; ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிந்தையையும்; தேவ சித்தத்தையும்; மங்காத மெய் பொக்கிஷங் களாகக் காட்டுகிறார்! இவைகளைத் தவிர்த்து பிற அனைத்தும் ஒன்றுக்கும் உதவாத குப்பைகளே!!

மேற்கூறிய உண்மைகளை நீங்கள் கண்கொண்டு காண முடிகிறதா? அவ்விதம் நீங்கள் காணும்போது மாத்திரமே, இயேசு மொழிந்த மலைப்பிரசங்க சத்தியங்களை உங்கள் முழு இருதயத் தோடும் மிகுந்த சந்தோஷத்தோடும் கைக்கொண்டு ஜீவித்திட முடியும்!

**பிறர் நமக்கு விளைவிக்கும் கஷ்டங்களிலிருந்தும், எரிச்சல் அடையும் படியான சூழ்நிலைகளிலிருந்தும், தப்பிக்கொள்ளுவதென்பது பெரிய காரியமே அல்ல! மாறாக, தேவன் நமக்கென்று நியமித்த அவ்வித**

**எல்கைக்குள் தங்கியிருந்து, அங்கு சந்திக்கும் தீமைக்கு நன்மை செய்வதே மேன்மையானதாகும்.**

*ஆஹா, நான் இப்பூமியில் அழைக்கப்பட்டிருக்கும் நோக்கம் இப்போது எனக்குத் தெளிவாகிறது! ஆம், கஷ்டங்களைத் தவிர்க்க* (Avoid) *அல்ல...... அவைகளை மேற்கொண்டு ஜெயித்திடவே* (Overcome) *நான் அழைக்கப்பட்டிருக்கிறேன்!*

*என் உடைமைகள் அனைத்திற்கும் நான் எந்த மதிப்பும் தராமலிருக்கும்போது, பிறரிடம் சிறிதும் பிரதி உபகாரம் தேடாமல் கொடுப்பதோ அல்லது யாதொரு உதவி செய்வதோ எனக்கு கடினமாயிராது. இவ்விதமாய் நான் செயலாற்றும் இக்கிரியைகள், எனக்கு அதிநிச்சயமான பிரதிபலனையும் மகிமையையும் கொண்டு வருகிறதே..... மேலும், இப்பூமியில் நான் சம்பூரண மகிழ்ச்சியோடு வாழும்படி வகை செய்கிறதே! அப்படியிருக்கும்போது நான் என் கரங்களை விரித்துக் கொடுப்பதென்பது எனக்குக் கஷ்டமோ?*

**இன்றைய உலகில் ஜீவிப்பவர்களுக்கு, இவ்வித வாழ்க்கை வாழ்வது கூடாதகாரியமாயிருக்கிறது. ஆனால் பரலோகப் பொக்கிஷத்தின் மீதே கண்ணாயிருக்கும் நமக்கோ, இவ்வித வாழ்க்கை நித்திய பேரின்பமான ஆதாயமே ஆகும்!**

*மனுஷரிடத்திலிருந்து வரும் புகழ்ச்சியை குப்பையாகவும், தேவனிடத்திலிருந்து வரும் புகழ்ச்சி ஒன்றையே அதிமேன்மையாகவும் கொண்டு வாழ்வேனென்றால், ஜனங்கள் என்மீது பலவித தீமையான மொழிகளையும் பொய்யாய் சொல்லும்போது...... இயேசு சொன்னது போலவே, நான் மகிழ்ச்சியுடன் களிகூருவதென்பது ஓர் கஷ்டமான காரியம் அல்லவே அல்ல! இவ்வித உத்தம ஜீவியம் வாழ்ந்து விட்டால், பரலோகின் மிகுந்த பிரதிபலனால் தேவன் என்னைக் கனப் படுத்துவார்! ஆகவே இன்று இவ்வையகத்தின் சகல மனிதர்களும் என்னைப் புறக்கணித்தாலும் எனக்கென்ன?*

*இனியும், ஒரு கன்னத்தில் நான் அறையப்படும்பொழுது மறு கன்னத்தைத் திருப்பிக்காட்டுவது எனக்கு கஷ்டமோ? ஏனெனில் துன்பங்களையும் அவமானங்களையும் தவிர்த்துக்கொள்வது இப்போது எனக்கு முக்கியம் இல்லையே! எனக்கு முக்கியமாய் இருப்பதெல்லாம்.....* **தீமைக்கு நன்மை செய்து,** *ஜெயங்கொள்வதே ஆகும்! இதனிமித்தமாய், நான் நித்தியத்தில் சதாகாலமும் எவ்வித சஞ்சலமும் இல்லாத உன்னத வாழ்க்கை வாழ்வேனே!!*

*இனியும், நான் என் சத்துருக்களை, சிநேகிப்பது கஷ்டமானதே*

*அல்ல? வேறு யாரையும்விட என் சத்துருவே அதிகமாய் நேசிக்கப்பட தேவையுள்ளவனாயிருக்கிறான்! பாவம்...... அவனுக்குத்தான் எனது அன்பும் அதிக தேவையாயிருக்கிறது!!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

---

## 'உணர்வுள்ள இருதயம்' பூரண வளர்ச்சியடையும்!

*ஒழுங்கை ஏற்றுக்கொள்ள மனதில்லாத கிறிஸ்தவன் "நான் சுயாதீனன்...... நீங்கள் கூறுவது பிரமாண சங்கிலி!" என பிதற்றுவான். இவ்வாறு யாதொரு ஒழுங்கும், கட்டுப்பாடும், அர்ப்பணமும், தீர்மானமும்....... இல்லாமல் சுற்றித்திரிபவர்கள் இன்றைய கிறிஸ்தவத்தில் மலிந்து கிடக்கிறார்கள்!!*

*என் மனதில், நான் ஐந்து "***உறுதிபூண்ட வாக்குறுதி***" பெற்று வாழ்கிறேன். இதை நீங்களும் கைக்கொண்டு வாழ்வது உங்களுக்கு நலமே உண்டாக்கும் என்பதை நான் அறிந்திருக்கிறேன்:*

**1. பாவம் அது எந்த ரூபமாயிருந்தாலும் எதிர்த்து நில்லுங்கள்!**

**2. "எனக்கு சொந்தம்" என யாதும் பிரவேசித்திட இடம் தராதீர்கள்!**

**3. உங்கள் சொந்த நியாயத்தை பாதுகாத்திட நில்லாதீர்கள்!**

**4. பிறருக்கு தீங்கு ஏற்படுத்தும், யாதொன்றையும் பேசித் திரியாதீர்கள்!**

**5. உங்களை மகிமைப்படுத்தும் அனைத்தையும் மறுத்து நில்லுங்கள்!**

*தேவனுடைய வார்த்தைகள் அனைத்தையும் நன்கு விளங்கி, அதற்கு கீழ்ப்படிவதுதான் "ஆவிக்குரிய பூரணம்" அடைவதற்கு இலகுவான வழி! ஒன்றை வைத்துக்கொண்டு, மற்றொன்றை விட்டு விடுவதென்பது நமக்கு ஒருபோதும் கூடாது. முழுமையான வேதாகமம் மாத்திரமே "ஓர் முழுமையான கிறிஸ்தவனை" உருவாக்கிட முடியும்!*

*உங்கள் சிந்தை உலகம், மகா தூய்மை நிறைந்த பரிசுத்த ஸ்தலமாய் காக்கப்படுவதாக! தேவனைப் பொறுத்தமட்டில், 'உங்கள் சிந்தை பூமி தான்' அவருக்கு எல்லாம்! இந்த நல்ல அழகூட்டப்பட்ட சிங்காரமான சிந்தை பூமியில்தான் நீங்களும் வாழ வேண்டியிருப்பதை அறிந்து கொள்ளுங்கள்! உங்கள் ஆடை கிழிந்ததாகவோ அல்லது மட்டமான தாகவோ இருந்தால் என்ன? உங்கள் சிந்தை கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு சுத்தமுள்ளதாய் இருந்தால், அதுவே போதும்!*

*உங்கள் சிந்தை எப்படியிருக்கிறது என்பதை வைத்துதான், உங்கள் இருதயத்தின் "தட்ப-வெப்ப நிலை" கணிக்கப்படுகிறது! உங்கள் சிந்தை எப்படியோ, அதை வைத்தே தேவன் உங்களை கணக்கிட்டு*

அறிந்து கொள்ளுகிறார்!! ஆகவே உங்கள் சிந்தை சமாதான முள்ளதாயும், பட்சமுள்ளதாயும், இரக்கமுள்ளதாயும், கனிவுகொண்ட தாயும், சினேகம் நிறைந்ததாயும், தேவனைப் பற்றியதாயும், அவரது குமாரனைப் பற்றியதாயும்...... நிறைந்திருப்பதாக! பரிசுத்த ஆவியானவரின் இணக்கம் உங்களுக்கு எவ்வளவு உள்ளதோ, அதைக்கொண்டு உங்கள் "சிந்தை பூமியை" காத்திடுங்கள்...... அங்கு யாதொரு 'அசுத்த' மிருகங்களோ அல்லது தீய பறவைகளோ பறந்து திரிந்திட அனுமதித்து விடாதீர்கள்! ஆம், இவ்வாறாகவே ஓர் "தூய்மையான இருதயம்" நமக்கு கிடைத்திட முடியும்!

கிறிஸ்தவ வாழ்வில் இரண்டு ரகமான ஜீவியம் மாத்திரமே உண்டு! 1.கட்டாந்தரை ஜீவியம்! 2. உழப்பட்ட நிலத்தின் ஜீவியம்! உழுது பட்டு, நொறுங்கிய ஜீவியத்திலிருந்தே அற்புதங்கள் தோன்றிடும்! சகோதரன் பவுலைப் பாருங்கள், அவருக்கு உண்டாயிருந்த "அந்த முள்" அவரை ஒப்பற்ற தேவ மனுஷனாய் மாற்றிவிட்டதே!! இவ்வாறு, வாழ்வின் பாதையில், ஒரு சிலர் மாத்திரமே தேவனை கண்டு கொள்ளுகிறார்கள்! ஆனால் பெரும்பாலோர், தேவனை காணமுடிய வில்லையே? அதற்கு என்ன காரணம் தெரியுமா? தன்னுடைய சொந்த வீட்டில் தேவன் ஒருபோதும் பாரபட்சமாய் நடப்பதே இல்லை...... மாறாக, வாழ்வின் சூழ்நிலைகளை சந்தித்திடும் நபரைப் பொறுத்தே எல்லாம் இருக்கிறது என்பதை அறிந்திடுவோமாக!

இந்நிலையில், நம்மை சோதித்து அறிந்திட வேண்டியது மிக அவசியமாகும். ஏனெனில், சிறந்த பரிசுத்தவான்களாய் திகழ்ந்த யாவரிடமும் காணப்பட்ட ஓர் அதிசயமான குணாதிசயத்தை நாம் எல்லோரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றே நான் அதிக பாரம் கொண்டிருக்கிறேன்: அந்த பரிசுத்தவான்களிடம் காணப்பட்ட **"ஆவிக்குரிய உணர்வுள்ள விழிப்பான ஜீவியமே"** நமக்கும் காணப்பட வேண்டும். இவர்கள் எப்போதெல்லாம், தங்கள் **உள் உணர்வில்** தூண்டுதல் பெற்றார்களோ, அதற்கிணங்க உடனே கிரியையும் செய்தார்கள். இவ்வித உணர்வுப்பூர்வமான ஆற்றலை என்றோ சில நாள் அல்ல...... தங்கள் ஜீவ காலமெல்லாம் அதைப் பெற்று வாழ்ந்தார்கள்.

**இந்த "ஆவிக்குரிய உணர்வை" ஒருவன் தன்னில் அப்பியாசித்து அதைப் பெருக்கிக் கொண்டே செல்ல முடியும்! அல்லது, அந்த 'உணர்வுகளை' அசட்டை செய்து, அவைகளை அழித்துப் போடவும் முடியும்!**

இத்தகைய 'உணர்வானது' பரத்திலிருந்து இறங்கி, ஒருவனை சுற்றிவளைத்து ஆட்கொண்டுவிடும் என எண்ணிவிடாதீர்கள். அது,

*தேவன் ஒருவனுக்கு 'ஈவாய்' தருவதே ஆகும். ஒன்று, அதை அவன் பெற்றுக்கொள்ளலாம், அல்லது அதை உதாசினப்படுத்தி விடலாம்!*

*இதுவே இன்றைய "சுவிசேஷ ஊழிய வட்டாரத்தில்" காணப்படும் பெரும் வீழ்ச்சியாய் இருக்கிறது.*

**இன்றைய ஊழியங்கள் அனைத்தும் பெரும்பாலும், உடனடி செய்கையாகவே செயல்படுகிறது. தேவனுக்கு காத்திருப்பதும், அவர் தரும் உணர்வைப் பெற்று கிரியை நடப்பிப்பதும் இவர்களுக்கு வெகுதூரமாய் இருக்கிறது!**

*ஆகிலும் இவர்களோ, தங்களது ஆவிக்குரிய வெறுமையை சற்றும் உணராதவர்களாய், அதை மூடுவதற்கு ஒரு வேத அதிகாரத்தை வாசித்து, சுருக்கமான ஓர் ஜெபம் செய்துவிட்டு வெறுமையின் ஜீவியத்திலேயே கடந்து போகிறார்கள்!*

*இதுபோன்ற துயரமான வீழ்ச்சியிலிருந்து ஒருவன்* **விடுதலையை விரும்புவதுகூட** *இன்று அபூர்வமாய் இருக்கிறது. அந்த விருப்பத்தை ஒருவன் பெற்றுவிட்டால், நாம் தியானித்ததுபோலவே "ஓர் உறுதி பூண்ட தீர்மானத்தோடு" வேதம் வழிவகுத்த பூர்வ வழிக்குத் திரும்பிட வகை தேட வேண்டும்! அப்படியாயின், அவர்கள் நிச்சயமாய் இழந்து போன தங்கள் ஆவிக்குரிய உணர்வுகளை மீண்டும் பெற்றிட முடியும்!*

*– A.W. டோசர்*

---

## 'அவர் மாத்திரமே' என்ற பாக்கியம் இந்த பூமியில் உண்டு!

*இங்கே நான் எழுத விரும்பும்* **தேவனுக்குரிய மகத்துவம்** *'என்னைக் குறித்த மேன்மையாய் இருந்தால்' அதை எழுதாமல் இருப்பதே நலம் என எண்ணியிருந்தேன். இதற்கு மற்றொரு காரணமும் உண்டு! அது என்னவெனில், இக்காலத்தில் "கொஞ்சம் ஆத்துமாக்களே 'திவ்ய நடத்துதலை' புரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கூட்டத்தாரோடு, என்னை நான் ஒருபோதும் ஐக்கியமாய் இணைத்துக் கொண்டதில்லை". 'அந்தரங்க அர்ப்பணிப்பையே' என்னுடைய சொத்தாய் நான் வைத்திருந்தபடியால், என்னுடைய காலங்கள் அவருக்கென அவரையே முற்றிலும் சுழன்று வந்தது! அதுமாத்திர மல்லாமல்,* **தேவன் எனக்குத் தந்த 'பிறரை' உற்சாகப்படுத்தி,** *அவர்களும் தங்கள் மகிமையைத் தேடாமல், தேவனுடைய மகிமையை மாத்திரமே தேடுவதற்கு தூண்டும் கருவியாக, என்னைத் தெரிந்து கொண்டார். இந்த இலக்கை இன்னும் அவர்கள் அடையவில்லை யென்றால், அவர்கள் "தங்கள் சுயத்திற்கு மரிக்கக்கடவர்கள்!" என்ற ஒரே ஆலோசனை தவிர, வேறு எதுவும் இல்லை.*

**அது ஏனென்றால், 'எழுத்துக் குவியல்' எவ்வளவு இருந்தாலும், அதைவிட அனுபவமாய் கற்றுக்கொள்வதே மிக எளிதாகும்!**

எழுத்தின் மூலமாய் அநேகருக்கு சுவிசேஷத்தை அறிவிக்க விரும்பும் நானே, கூற விரும்புவது என்னவென்றால் "அனுசாரங்களை கொட்டி எழுதுவதைவிட அனுபவ செயல்முறை" பலமடங்கு மேலானதாகும் என்ற உண்மையேயாகும்!

பல கடுமையான சோதனை அனுபவங்களை நான் கடந்து வந்ததினிமித்தம், அந்த அனுபவங்கள் என் ஆத்துமாவை நேர்த்தியான முறையில் சுத்திகரிக்கச் செய்தது.

**பல துன்ப குகையிலிருந்து வெளியே வரும்போது, அந்த காரிருளான அனுபவங்கள் 'கர்த்தருக்குள் மகிழ்ச்சியை' குன்ற வைத்து விடுமோ என்ற தவறான உணர்வை உடைத்தெறிந்தது!**

இவ்வாறு நான் சுத்திகரிக்கப்பட்ட நிலையில் 'தேவனை அணைத்துக்கொண்ட அனுபவம்' வர்ணிக்க இயலாததொன்றாகவும், இதற்கு இணையானது வேறு ஒன்றும் இல்லை என நான் அறிக்கை செய்திட வைத்துள்ளது. அவ்வளவு மேன்மையாய் என் சிந்தைகளும், என் சொந்த விருப்பங்களும் சுத்திக்கரிக்கப்பட்டு, 'தேவனுக்குள் என்னை கரைந்துப் போகும்படி செய்து விட்டது'. என் ஆத்துமாவில், எனக்கு இப்போது "ஒரு சுய-நல சிந்தையும் தோன்றாமல் இருந்ததைக் கண்டு" கர்த்தருக்கு மகிமை செலுத்தினேன்! இவ்வாறாக, என் மனதின் வலிமையும், அதன் மென்மையான ஒவ்வொரு உணர்வுகளும் ஆச்சரியப்படத்தக்க வகையில் சுத்திக்கரிக்கப்பட்டதை உணர்ந்தேன்.

முன்பு இருந்த நாட்களில், என் சிந்தைகளில் இளைப்பாறுதலற்ற நிலை இருந்ததைக் கண்டிருக்கிறேன். ஆனால் இப்போதோ, என்னை யாதொன்றும் கலங்கிப்போகச் செய்யவில்லை. என்ன செய்வோமோ? என்ற தவிப்பும், அதனிமித்தம் உண்டாகும் ஆரோக்கியமற்ற பிரதிபலிப்பும் என்னை விட்டு அகன்றது! இப்போதும் "என் சித்தம்" வளர்வதற்கு, ஊட்டத்திற்கு தேவையான அனைத்து பசிகளும் எனக்குள் கொல்லப்பட்டது! இப்போது நான் நின்று கொண்டிருந்த நிலை, தேவனுக்கு எதுவெல்லாம் பிரியமோ அல்லது தேவனை எதுவெல்லாம் பிரியப்படுத்துமோ அதை மாத்திரமே செய்திட என் உள்ளத்தில் தவிப்பு இருந்தது. இத்தனை விஸ்தாரமான சர்வ வல்ல தேவனின் எல்லை நாளுக்கு நாள் என்னில் அதிகரித்தது.

**என் ஆத்துமாவில், என் மணவாளனின் சுபாவங்களில் அதிக அதிகமாய் பங்குப் பெற்றேன். என் ஜெபமெல்லாம் "அவர் மாத்திரமே" என்பதாயிருந்தது!**

*'விண்ணகம் என்னைப் பெற்றெடுத்தது போல' உணர்வே எனக்கு இருந்தது. இப்படியொரு அனுபவத்தின் மகிழ்ச்சி, தேவனுக்குப் பிரியமாயிருக்கும் என்றே நான் விசுவாசிக்கிறேன்! இவ்வாறாக, என் ஆத்துமா தேவனுக்குள் பிரவேசித்து அடைந்த மேன்மை அனுபவங்கள் யாவும் "எண்ணற்ற ஆத்துமாக்களின் நன்மைக்காகவே!" என்பதை நான் அறியும்படி தேவன் உணர்த்தினார்!*

*நான் ஆலயத்திற்குச் சென்று, வழக்கம்போல் பாவ சங்கீர்த்தனம் செய்ய முற்பட்டேன். அப்போது, என் ஆத்துமா கர்த்தருக்குள் மூழ்கிய உணர்வில், யாதொன்றும் பேசவோ அறிக்கைச் செய்யவோ என்னால் முடியவில்லை! அவ்வளவு வலிமையாய் தேவன் என் ஆத்துமாவை, ஆவியின் உணர்த்துதலுக்கு உட்படுத்தினார். இதுபோன்ற உன்னத அனுபவம் "என் சுயம் மரித்த நிலையில்" மாத்திரமே ஏற்பட்டதென அறிந்தேன். அதனால் நம்முடைய ஆத்துமா, திவ்ய பிரசன்னத்தில் 'கரைந்து சென்றிட' வழி பிறந்ததைக் கண்டேன். "நான் மரித்தேன்!" என நான் கூறியதின் உண்மை தன்மை என்னவென்றால், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் 'பாதையாகவே' என் கண்களுக்குப் புலப்பட்டது.*

*இது மெய்யாகவே, என் ஆத்துமாவின் பஸ்கா அல்லது Pass - Over! ஆம், என் ஆத்துமா தன் நிலையிலிருந்து தெய்வத்தின் நிலைக்குள் 'கடந்து செல்லும் பாதை' நிறைவான மகிழ்ச்சியை தருகிறது. இதுவே, நான் அடைந்திட வேண்டிய..... நீங்களும் அடைந்திட வேண்டிய வாக்குத்தத்த பூமி!*

*– மேடம் குயான்*

---

## கர்த்தருடைய ஊழியத்தில் இடைஞ்சல் செய்வது குற்றம்!

*சபையில் தேவனால் நியமனம் செய்யப்பட்ட போதகர்கள், பரத்திலிருந்து தோன்றிய 'தேவ தூதர்கள்' என்ற எண்ணம் தவறு! அவர்கள் சபையாரைப்போலவே, பாடுள்ளவர்கள். அவர்களுக்கும் பலவித கவலைகளும், துன்பங்களும் உண்டு. என்றாலும், அவர்கள் சோர்ந்து போகாமல் ஆண்டவருடைய வேலையை உத்தமமாய், ஒழுங்காய் நிறைவேற்ற வேண்டியவர்கள்! தங்கள் ஊக்கமான ஊழியத்தால், ஆலயத்தில் கூடிவரும் பல நிலைமையிலுள்ள ஜனங்களை கிறிஸ்துவுக்குள் ஊன்றகட்ட வேண்டியவர்கள்! தங்களுக்குள்ள குடும்பக்கஷ்டங்களை தேவபலத்தால் சகித்துக் கொண்டவர்கள்! ஆகிலும், அவருடைய கிருபையைச்சார்ந்து, கவலைகளாலும், பாடுகளாலும் மனம் சோர்ந்து தவிக்கும் சபை*

*மக்களை, தங்கள் ஊக்கமான ஜெபத்தாலும் திருவசனப் போதனை யாலும் உயிர்ப்பித்து, அவர்களுடைய விசுவாசத்தை ஸ்திரப்படுத்த தங்களை அர்ப்பணித்தவர்கள்!*

**கவலையோடும் மனவேதனையோடும் ஆராதனைக்கு வந்தவர்கள், மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் வீடுகளுக்குத் திரும்பும்படி செய்ய பாடுபடும் உத்தம ஊழியர்கள் அவர்கள். ஒவ்வொரு ஆராதனையும் சபையாருக்கு ஆசீர்வாதமாயிருக்க வேண்டுமே என பாடுபடும் கர்த்தரின் அடிமைகள்!**

*போதகர்கள் இவ்விதமான பலனுள்ள ஊழியஞ் செய்வதற்கு தேவகிருபை மாத்திரமல்லாமல்,* **சபையாருடைய அன்பும் பணிவான நன்றியும்** *அவர்களுக்கு அவசியம்! இதை மறந்து, யாராவது சபையில் குழப்பங்களையும் பிரிவினைகளையும் உண்டாக்குவார்களானால், உத்தம ஊழியர்கள் எவ்வளவோ வேதனையோடும் பெருமூச்சோடும் கண்ணீரோடும் வேலை செய்ய வேண்டியதாயிருக்கும். அப்படி ஏற்படுவது தேவனுக்கு மிகுந்த துக்கத்தையே உண்டாக்கும். ஏனெனில், "அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே" என்கிறார் (எபி.13:17). "***கொஞ்சம்** *புளித்த மா, பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்கும்" "***ஒரு கசப்பான வேர்** *முளைத்தெழும்பிக் கலக்க முண்டாக்குகிறதினால், அநேகர் தீட்டுப்பட நேரிடும்". எல்லாரு மல்லவே, சில துஷ்டராலே தானே சபையில் சங்கடங்கள் ஏற்படு கின்றன. இது மிகவும் பயங்கரமான விஷயம்!*

**நமது பலவீனங்களை, பாவங்களை அநேகமாய் பொறுத்துக்கொள்ளும் தேவன், தமது ஊழியருக்கும் ஊழியத்துக்கும் இடைஞ்சல் உண்டாக்கு கிறவர்களை தப்பவிட மாட்டார்!**

*"பக்தர், சித்தர், பரம ஞானிகள், சித்தம் கலங்கிட தீவினை மூண்டு விடும்" என்னும் ஆதியில் கூறப்பட்ட சொல், பொய்யல்ல. சூரிய உஷ்ணத்தில் மைல் கணக்காய் நடக்கலாம்;* **'சூரிய உஷ்ணம் பெற்ற மணலிலோ'** *(ஊழியனோ, அவனது ஊழியத்திலோ) சூடு பொறுக்காமல் துள்ளிவிழ நேரிடும். மோசேக்கு எதிர்த்து நின்ற ஜனங்களைப் பற்றித் தேவன் சொன்னதென்ன? "கொஞ்சம் விலகு மோசே, ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன்" என்றார். அதை, அப்படியே செய்தார்!*

*போதகரை அதிகமாய் மதித்து அவர்களிடம் எப்போதும் பக்திவிநயமாய் நடந்து கொள்ளும் ஒரு சகோதரனை அறிவேன்.*

*யாராவது ஒருவர் போதகர்களைக் குறைவாய் பேசினால் அவர் சகிக்கமாட்டார். எந்த சபையைச் சேர்ந்த போதகரென்றாலும் சரி, எல்லாரிடமும் அவருக்கு குரு பக்தி உண்டு. குருக்களில் உத்தமர்கள் இருப்பதுபோல உதவாதவர்களும் இருக்கிறார்களே என்று யாராகிலும் சொன்னால்....*

**அதைப்பற்றி உனக்கென்னையா? நல்லவரானாலும் கெட்டவரானாலும் ஆண்டவருக்கல்லவோ அந்த ஊழியர் உத்திரவாதி! நீ அவருக்கு எதிர்த்து நின்று, உன்னை ஏன் கெடுத்துக் கொள்ளுகிறாய்?**

*உன் வீட்டிற்கு வந்து, சுகமான பேறுகாலத்துக்காக அவர் ஜெபித்தார். நீ குழந்தையாயிருந்தபோது கையிலேந்தி பிரதிஷ்டை செய்தார். நீ இரட்சிக்கப்பட பாடம் கற்றுக்கொடுத்தார். உனக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அபிஷேகம் பெற நடத்தியுள்ளார். உனக்கு நிச்சயதார்த்தம் செய்து வைத்தார். உன் கலியாணத்தையும் முடித்து வைத்தார். உத்தியோக ஆலோசனைகளையும், கடிதங்களும் அதன் சம்பந்தமாய் எழுதிக்கொடுத்தார். சந்தோஷ, துக்க காலங்களில் உன் வீட்டுக்கு வந்து ஜெபித்து ஆறுதல்படுத்தினார். நீ மரிக்க நேரிட்டால் ஜெபம் செய்து; நல்ல அடக்கம் செய்பவரும் அவரே! இவ்வாறு, முதலிலிருந்து கடைசிவரை சகல காரியங்களையும் உனக்காக நடத்தி வைக்கும் உன் போதக தகப்பனுக்கு விரோதமாக நீ எழும்புவதும் பேசுவதும் சரியா? என்று கேட்பார். தங்கள் போதகர்களை நேசித்து, ஊழியத்தில் அவர்களை உற்சாகப்படுத்து கிறவர்கள்* **கர்த்தரால் ஆசீர்வாதம் பெறுகிறார்கள்** *என்பதும், அவர்களைப் பகைத்து, மனங்கலங்க வைத்து ஊழியத்துக்கு இடையூறு செய்கிறவர்கள், கர்த்தரால் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதும் சரித்திர பூர்வமாய் சபைகள் திட்டமாய் அறிந்த விஷயம்!*

*– பரமானந்தம் ஐயர்*

---

## பலத்த கிரியையோ? அதன் ஊற்றுக்கண் "வெற்றிடம்!"

*ஒரு சமயம், D.L.மூடி பிரசங்கியார் லண்டன் மகா பட்டணத்திற்கு ஊழியம் செய்திடச் சென்றிருந்தார்! ஒரு மாலை கூட்டத்தில் அவர் பேசும்படி சென்றார். அந்தக் கூட்டம் ஓர் பெரிய தியேட்டர் அரங்கில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது! ஒரு நாற்காலிகூட காலி இல்லாமல், அந்த அரங்கு முழுவதும் ஜனங்களால் நிரம்பி வழிந்தது. படித்த, பண்புள்ள பட்டணத்து வாசிகள் D.L.மூடியின் பிரசங்கத்தைக் கேட்டிட ஆர்வத்துடன் கூடி வந்தனர். முன் வரிசையில் பிரிட்டிஷ் அரசின் ராஜா குடும்பத்தினர் அமர்வதற்கான*

ஆசனங்களும் நிரம்பி விட்டன! பாடல் பகுதி முடிந்தவுடன், D.L.மூடி பிரசங்கம் செய்திட எழுந்து வந்தார். பிரசங்க மேடையில், தான் பேசும்படி முன்குறித்த லூக்கா 4:27-ம் வசனத்தை வாசிக்கத் தொடங்கினார். அவர் வாசித்த ஆங்கில வேதாகம வசனத்தின்படி "அல்லாமலும், இஸ்ரவேலருக்குள்ளே அனேக குஷ்டரோகிகள்..... எ....லி....ச....ா.... தீர்க்கதரிசியின் காலத்திலே இருந்தார்கள்" என வாசித்தார். ஆனால், 'எலிசா' என்ற ஆங்கில பதத்தை அவர் சரியாக உச்சரிக்க முடியாமல் மிகவும் திக்கி..... திக்கி வாசித்தார். ஆகவே, மீண்டும் அந்த வசனத்தை திக்காமல் வாசிக்க முயற்சித்தார்! மீண்டும் அந்த இடத்தில் நாக்கு குளறி திக்கி வாசித்தார். மிகுந்த வருத்தத்தோடு, மீண்டும் மூன்றாம் முறை வாசிக்க முயற்சித்தார்.... இப்போதும் திக்கி....திக்கி வாசித்தார்!

**இப்போது *மூடி,* மனதில் சஞ்சலத்தோடு வேதாகமத்தை மூடிவைத்து விட்டு, வானத்தை அண்ணாந்து பார்த்து "ஓ என் தேவனே, நான் என் செய்வேன்? என்னால் எதுவும் பேசமுடியாதுபோல் தவிக்கிறேன்...... இந்த திக்கு வாயைக் கொண்டு, இங்கு கூடியுள்ள ஜனங்களுக்காக கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்! என்ற செய்தியைப் பிரசங்கிக்க எனக்கு தயைபுரிந்தருளும்!!" என மனதிற்குள் பெருமூச்சோடு ஜெபித்து முடித்தார்!**

அப்போது "**தேவ வல்லமை**" அவர்மீது வந்து அமர்ந்ததை D.L.மூடி உணர்ந்தார். அந்த தேவ வல்லமையோடு அக்கூட்டத்திற்கு சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். கூட்டத்தி லுள்ள ஜனங்கள் யாவரையும், தேவ வல்லமையோடு புறப்பட்டுவந்த அவரது வார்த்தைகள், ஜனங்களை உடைத்து அவர்களை கண்ணீர் சிந்தி மனந்திரும்பும்படி செய்தது!! அவருடைய பிரசங்கங்களை பல முறை கேட்ட ஒரு சகோதரன் கூறும்போது "இந்த அரங்கில் D.L.மூடி அவர்கள் அத்தனை நேர்த்தியாக பேசியதுபோல், வேறு இடங்களில் நான் கேட்டதில்லை!" எனக் கூறினார். ஓர் திக்குவாய் பிரசங்கி, நேர்த் தியாய் பிரசங்கித்ததின் இரகசியத்தை உங்களால் உணர முடிகிறதா?

ஆம், உங்கள் அறையின் மேல்தட்டு சுவற்றில் (CEILING) ஒரு பூச்சி கீழேவிழாமல் நடந்து செல்வதற்குரிய இரகசியம், அந்த பூச்சியின் கால்களின் இடையில் உள்ள "**வெற்றிடம்**" உள்ள நுண்ணிய இழைகள் இருப்பதால்தான்! எவ்வளவு பெரிய அலைமோதினாலும் ஒரு நத்தை சரிவான பாறையில் கெட்டியாக பிடித்து நிற்கிறதே, அதன் காரணமும், காலில் உள்ள ஜவ்வின் **வெற்றிடமேயாகும்!** ஜீவியமோ அல்லது ஊழியமோ...... யாதொன்றிற்கும் வல்லமை வந்து தங்கு வதற்கு இந்த "வெற்றிடமே" ஆவியானவருக்கு தேவையாயிருக்கிறது!

*பரிசுத்தாவியின் வல்லமை நம்மில் தங்குவதற்கு* **"ஒன்றுமில்லா மைக்குள்"** *நாம் வரவேண்டியதே அன்றி வேறொரு தகுதியாதும் இல்லை! இதை இயேசு நேர்த்தியாக விவரித்து, "நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள்!......* **என்னையல்லாமல்** *உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது!!" என ஆணித்தரமாகக் கூறினார் (யோவான் 15:5). ஆனால் நாமோ, நம் குருவின் வாசகங்களை சிறிதும் விசுவாசிப்பதே இல்லை. அவருக்காக வாழும் ஜீவியம், அவருக்காக செய்திடும் ஊழியம் ஆகிய யாவிலும், நாமே தொடர்ந்து போராடி முயற்சிக்கிறோம். குறிப்பாக கர்த்தருடைய ஊழிய பகுதியில், ஒன்றை முயற்சித்து தோல்வியடையந்து..... பின் வேறொரு 'கமிட்டி' கூட்டம் போட்டு, மற்றொரு சுவிசேஷ படைமுயற்சி திட்டங்கள் தீட்டி தோல்வியடைந்து...... தொடர்கிறோமேயல்லாமல், நம்முடைய தொடர்பு திராட்சைச் செடியில் எந்த அளவு உள்ளது என்பதை சோதித்துப் பார்ப்பதேயில்லை!*

*நாம் எடுக்கும் சொந்த ஊழிய முயற்சிகள் பெரும் பரபரப்பிற் குரியதாய் தோன்றியபோதும், அதன் முடிவோ ஒன்றிற்கும் பிரயோஜனமற்றதாகவே இருக்கிறது!*

**நாம் அவரை முழுவதுமாய் சார்ந்துகொள்ளும் ஸ்தானத்தை அடைந்தி டாமல் செலவுசெய்திடும் அத்தனை நேரங்களும், பணமும், முயற்சிகளும் வீணானதேயாகும்! ஆம், இதைத்தான் இயேசு திட்டவட்டமாய் குறிப்பிட்டுக் கூறினார்.**

*இருப்பினும், நாமோ "ஒன்றுமில்லாமைக்குள்" வந்துவிடுவதற்கு விருப்பம் உள்ளவர்களாயிருந்தால், நாம் நிச்சயமாய் தேவனுக்கென்று "எதையாகிலும்" செய்து நிறைவேற்றிட முடியும்! எனவேதான், ஒருவன் இயேசுவின் சீஷனாய் அவரைப் பின்பற்றவேண்டுமென்றால், அவன் "தனக்குண்டான யாவற்றையும் வெறுத்திட வேண்டும்" என திட்டவட்டமாய் இயேசு கட்டளையிட்டார்! அப்போதுதான், என் கொடி அவர்மீது சார்ந்து, 'அவரது சாரம்' எனக்குள் பாய்ந்து, நிலைத்து நிற்கும் கனிகொடுப்பவனாய் என்னை மாற்றும்!!*

*இன்று அனேகர் 'ஓடி-ஆடி' பணிசெய்தால், பலன் கிடைக்கும் என எண்ணுகிறார்கள்! அவர்களின் சுறுசுறுப்பு மெச்சுதற்குரியது தான்!! ஆனால், பிரசங்கிப்பதும், சாட்சி கூறுவதும், கைப்பிரதி வினியோகிப்பதும், ஆஸ்பத்திரி ஊழியம் செய்வதும், தரித்திரருக்கு பணியாற்றுவதும் என.... ஏராளம் செய்வதை நீங்கள் வேண்டுமானால் பெரிதாக எண்ணலாம்! ஆனால் "உங்கள் உழைப்பு" தேவனுடைய தராசில்* **யாதொரு பலனும் இல்லை** *என்றே அவரது அளவுகோல்*

*காட்டும்!* **ஆம், "ஆவியானவர்" மாத்திரமே பலன் தருபவர்!** *உங்கள் ஐக்கியம் திராட்சைச் செடியோடு சரியாக இருந்தால், எத்தனை இன்னல்கள், இடறுகள், குற்றம்சாட்டுவோரின் பள்ளத்தாக்கில் தனித்து நின்றல், தவறாக புரிந்து கொள்ளப்படுதல், தடுமாறவைத்திடும் ஏமாற்றங்கள்...... ஆகிய அனைத்தும், திராட்சை தோட்டக்காரர் உங்களை சுத்தம் செய்து மிகுந்த பலனைத் தருவதற்கே ஏதுகரமாக அமைந்திடும்!!*

**ஆண்டவர் இயேசு "என் உதவியில்லாமல் உங்களால் ஒன்றும் செய்யமுடியாது" என கூறவேயில்லை! இன்று அனேகர் தாங்களாக செய்திடும் முயற்சிக்கு அவரது உதவியையும் ஆசீர்வாதத்தையும் கேட்கிறார்கள்! அது முற்றிலும் தவறு!! "அவரையல்லாமல்"...... அதாவது, அவர் என்னில் பிழைத்து வாழாமல், நான் செய்திடும் அனைத்தும் ஒன்றுமில்லாமையேயாகும்!**

*ஆகவே, இப்போது உங்களை அண்டிவரும் கேள்வி இந்த 2- கேள்விகள் மாத்திரமே! 1) நீங்களாக உங்கள் சொந்த பெலத்தில் சாதித்து "அவை ஒன்றுமில்லாமைக்குள்" போவீர்களா? அல்லது 2)"நீங்களே ஒன்றுமில்லாமைக்குள்" வரும்படி, உங்கள் முழுமை யையும் வெறுத்து, அவரது கரத்தில் உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா? என்பதுதான்! முதலாவது 'ஒன்றுமில்லாமை' நரகத்திற்குரியது! இரண்டாவது 'ஒன்றுமில்லாமை' நித்தியத்திற்குரியது! கவனம்!!*

*- D.L. மூடி பிரசங்கியார்*

---

## "பரம்பரை சாபமோ?" என கலங்குவோருக்கு ஓர் நற்செய்தி!

*பிரிட்டிஷாரின் ஆட்சியிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டிருந்தும், பிசாசின் ஆதிக்கத்திலிருந்து பெருவாரியான நமது இந்திய சகோதர சகோதரிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை! ஒவ்வொரு கிறிஸ்தவனும், எந்த நாட்டிலிருந்தாலும்,* **தெய்வீக விடுதலைத் தூதுவன்** *என்றே அவன் இயங்க வேண்டும் என்பதே வேதத்தை கவனித்துப் படிக்கும்போது நாம் காணும் முடிவாகும்! ஆம், ஒவ்வொரு கிறிஸ்தவனும் மற்றவர்களை விடுவிக்கிறவனாகவே திகழ வேண்டும்! இயேசுதான் நமது ஆத்தும இரட்சகர்! நாமனைவரும் அவருக்கு ஆத்தும ஆதாயம் செய்திட வேண்டும்!*

**இயேசுவே பிரதான மேய்ப்பர்! நாமோ, மேய்ப்பனில்லாது சிதறியலையும் திரளான ஜனத்திற்கு மேய்ப்பர்களாய் முன்சென்று பணியாற்ற வேண்டும் (மத்.9:35,36).**

*இயேசுவே அறுவடையின் ஆண்டவர்! நாமோ, அவருடைய*

*இராஜ்ஜியத்திற்கென அறுவடைப் பணியாளர்களாயிருக்க வேண்டும் (வச.37,38).*

*நாம் மெய்யாகவே, இயேசுவானவர் இருந்தது போலவும், இருப்பது போலவுமே, இவ்வுலகில் நாம் இருக்க வேண்டும் (1யோவான்.4:17). அவர் நடந்தபடியே நாம் நடக்க வேண்டும்! அவர் நடப்பித்தவற்றையே நாம் நடப்பிக்க வேணடும்! (2:6). சாத்தானின் பிடியிலிருந்து மக்களை விடுவிப்பதற்காய் நமது கைகள் அவரது கைகளின் நீட்சியாயிருக்க வேண்டும்! அல்லேலூயா.*

*ஒரு சில பிரசங்கிமாரைச் சுட்டிக்காட்டி, "அவருக்கு விடுதலை ஊழிய வரம் இருக்கிறது" என்று மக்கள் சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன். தவறான இவ்வெண்ணத்தைத் திருத்தி, ஒவ்வொரு விசுவாசியும் விடுதலை ஊழியம் செய்ய முடியும் என்ற திருமறைச் சத்தியம் நிலைத்தோங்குவதாக!*

*"பரம்பரை சாபச் சங்கிலியை முறிக்கிறோம்!" என்று வேத வசனத்திற்கு விரோதமான செயலில், விடுதலை ஊழியர் எனப்படும் பலர் களம் இறங்கியிருப்பது துக்கம்! 'பரம்பரை சாபம்' எனக்கு உள்ளதோ? என கலங்கும் மாந்தர்களே, சத்திய வேதம் கூறும் ஜீவ வார்த்தைகள் 'இன்று' உங்களை விடுதலையாக்குவதாக! "பரம்பரை ஆவி" என்று வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. பழைய உடன்படிக்கையின் காலத்தில்கூட, "தேவனைப் பகைக்கிறவர்கள்" என்போரிடம்தான் மூதாதையரின் அக்கிரமத்தைத் தேவன் விசாரிப்பார் என்று காண்கிறோம் (யாத்.20:5). "மூதாதையர் புளியங்காய் சாப்பிட்டனர்; பிள்ளைகளின் பற்களில் கூச்சம்" என்றொரு பழமொழி முற்காலங்களில் இருந்து வந்தது உண்மைதான்! (எசே.18:2). ஆனால் தேவன் இதனை மாற்றி, அழுத்தந்திருத்தமாய் கூறுவதைக் கவனியுங்கள்: "இனி இஸ்ரவேலில் இப்பழமொழியைச் சொல்வதில்லை என்பது என் உயிர்மீது ஆணை என்கிறார் கர்த்தராகிய ஆண்டவர்!" (வச.3). இந்த சத்தியத்தை, நித்திய நித்தியமானது என்பதைத் தேவன் ஆணித்தரமாய் கூறுவதை கவனியுங்கள்: "என் உயிர்மீது ஆணை!" என்றல்லவா உறுதிப்படுத்தினார்.*

ஒவ்வொரு மனிதனும், தனது பெற்றோர் அல்லது மூதாதையரது பாவத்திற்கு பொறுப்பு அல்ல, தனது சொந்தப் பாவங்களுக்கே பொறுப்பு (வச.4).

*தீர்க்கன் எரேமியா மூலமாகவும், அதிமுக்கியமான இச்சத்தியத்தை தேவன் அறிவித்துள்ளார் (எரே.31:29,30). ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவன் ஒரு புதுப்படைப்பு* (Creation)*! கடந்த கால "ஜீவனிலிருந்து" புறப்பட்டு வந்த பரிணமிப்பு* (Evolution)

*அல்ல! (2கொரி.5:17). "இப்பொழுது" இவையெல்லாம் முன்னோர்களின் வழிவந்ததாயிராமல், "தேவனால்" உண்டாயிருக்கின்றன! (வச.18). நமது முன்னோர்கள் அனுசரித்து வந்த பயனற்ற, கண்மூடித்தன காரியங்களிலிருந்து நம்மை கிறிஸ்துவின் இரத்தம் மீட்டுவிட்டது! (1பேதுரு 1:18,19). தேவன் நம்மை எகிப்தை விட்டு "வெளியே" கொண்டு வந்துவிட்டார்.* **"இப்பொழுது" நமக்கு விரோதமான (எகிப்தின்) மந்திரவாதமோ, குறி சொல்லுதலோ கிடையாது!** *"பிசாசு" என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று சொல்லித் திரிந்து அவனைப் போற்றாமல், "தேவன் என்னென்ன செய்துள்ளார்" என்றே சாட்சியிடுங்கள்! (எண்.23:22,23). 'பரம்பரை சாபம்' அல்லது தகடு எடுத்தல் போன்ற சத்தியத்திற்கு விரோதமான பித்தலாட்டங்களைப் பேசிப் பயமுறுத்தும் 'வஞ்சக' திருடர்களிடமிருந்து தப்பித்து விடுதலை பெறுங்கள்!*

*– R. ஸ்டான்லி BYM*

---

## "ஒப்புரவாகும் உள்ளமே" தேவன் தங்கும் வாசஸ்தலம்!

*சகேயு ஓர் ஐசுவரியவானாய் இருந்தாலும், மேட்டிமை எண்ணமில்லாமல், ஒரு மரத்தில் அவன் ஏறியதை இயேசு கண்டார்! அதுவும், 'ஓடிச்சென்று' மரம் ஏறிய செயல், அவனது தெய்வ வாஞ்சையை வெளிப்படுத்தியது (லூக்கா 19:4).* **தன்னை 'ஒரு பொருட்டென்று' எண்ணாத தாழ்மையும் அவனிடமிருந்தது!**

*அதைக் கண்டு பரவசமடைந்த இயேசு 'சகேயு' என பெயர் கூவி அழைத்தார்! "நீ சீக்கிரம் இறங்கிவா, உன் வீட்டிலே தங்க வேண்டும்!" என ஆனந்த பரவசத்தோடு கூறினார். அது, "நான் வாசம் செய்திட ஒரு கூடாரம் கட்டு" என மோசேக்கு தேவன் கூறியதைப்போல் இருந்தது! இரட்சகர் தங்கும் என் வீடு, பரிசுத்தமாய் இருந்திட வேண்டுமே என .... தான் சீர்ப்பட வேண்டிய, ஒப்புரவாக வேண்டிய விஷயங்களை* **"ஓரத்தனையாய் அல்ல... நாலத்தனையாய்" திருப்பிக்கொடுத்து ஒப்புரவாகுவேன்!** *என்ற, அவனது பரிசுத்தமாகுதலின் முழு இருதயம் கண்டார் இயேசு!*

*பணத்தை திருப்பிக் கொடுத்து ஒப்புரவாகுதல் மிகவும் நல்லது! அதை நேர்த்தியாயும் மனப்பூர்வமாயும் சகேயு செய்தான்!*

> ***பணத்தை திரும்பச் செலுத்தி ஒப்புரவாகுதலைவிட பிறரின் நற்பெயரை அவமானப்படுத்தி, புறங்கூறும் கொடிய இழிசெயலை 'ஒப்புரவாக்கி' சீர்ப்படுவதே இன்று அனேகருக்கு அவசியமாயிருக்கிறது!***

*பிறருக்கு அவப்பெயர் ஏற்படுத்துவது 'கொலை செய்யா*

*திருப்பாயாக' என்ற தேவ நீதியை மீறுவதாகவே இருக்கிறது! அதுவும் 'தன் சகோதரனை நியாயமில்லாமல்' கோபிப்பதும், மூடன் என்று இகழ்வதும்....* **பணத்தை அபகரித்ததைவிட அவர்களின் நற்பெயரை அபகரித்த அபாண்ட செயலாகும்!** *(மத்.5:21,22).*

*உங்கள் புறங்கூறுதல் அல்லது 'ஒருவரது நற்குணத்தை கொன்ற செயல்' அந்த சகோதரனுக்குத் தெரியாவிட்டாலும் "அந்த சகோதரனுக்கு ஏற்பட்ட குறை" உங்கள் பேரில் உண்டாகும்! அது 'எரிநரகத்திற்கு ஏதுவானது' என்றும் இயேசு எச்சரித்தார்! ஆகவே.... வேத வாசிப்பு, ஜெபம், ஊழியம் என 'அவரது பலிபீடத்து காணிக்கை செலுத்த வந்த' சகோதரா, முதலாவது உன் சகோதரனோடு ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கை எதுவாகிலும் அதைச் செலுத்து, அப்போதுதான் தேவன் 'அந்த காணிக்கையை' அங்கீகரிப்பார்! (வச.23,24).*

*சாப்பிடுவதற்கும் சமயமில்லாதபடிக்கு, தன்னிடத்தில வந்த 'அனேக ஜனங்களுக்கு' ஊழியம் செய்ததை அவரது வீட்டார் கண்டார்கள்! அதைக் கண்டு "இவர் மதிமயங்கியிருக்கிறார்!" எனக் கூறினார்கள் (மாற்கு 3:20,21). அதை இயேசு, ஒரு பொருட்டாய் எண்ணவில்லை! இவ்வாறு தன்னைக் குறித்து கூறிய அனைத்து தீயமொழிகளையும், தீமையையும் இயேசு மன்னித்துவிட்டார்! ஆனால், அடுத்த 22-ம் வசனம் தொடங்கி, இயேசு பரிசுத்த ஆவியினாலே 'பிசாசுகளைத் துரத்திய செயலை' சூழநின்ற வேதபாரகர் கூட்டம் "இவர் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டு" பிசாசுகளைத் துரத்துகிறான்! எனக்கூறியதைக் கேட்டு, அவர்களை அழைத்து ஓர் சத்தியத்தை கூறினார் (வச.23).* **'மனுஷனாகிய எனக்கு'** *நீங்கள் செய்த எந்த பாவமும், எந்த தூஷணமும் உங்களுக்கு மன்னிக்கப்படும், ஆனால் "***பரிசுத்தாவிக்கு விரோதமாக** *தூஷணம் சொல்பவன்.... என்றென்றைக்கு மன்னிப்படைய மாட்டான்" என்ற எச்சரிப்பை மனதில் வைத்துக் கொள்வோமாக!*


**இவனது ஊழியம் 'அபிஷேகம் இழந்த' ஊழியம்! அல்லது, இது பிசாசின் ஊழியம் என, தேவனால் ஆட்கொள்ளப்பட்ட எந்த ஊழியத்தையும் குறைகூறுவது எத்தனை கொடிய தீது என்பதை உணர்வோமாக!**

*இதுபோன்ற செயலை செய்தவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் கர்த்தரிடம் மனந்திரும்பி ஜெபித்து ஒப்புரவானால், கர்த்தர் 'ஒருவேளை' அவர்களுக்கு மனதிரங்கி ஏற்றுக்கொள்ளக்கூடும்! நாம் யாவருமே, இந்த சகேயு போலவே 'ஒப்புரவாகும் உள்ளம் கொண்டு' தேவன் தங்கும் வாசஸ்தலமாய் விளங்குவோமாக!*

*– T. ரத்தினகுமார்*

# ஹேக் லேடிமர்

## விசுவாச இரட்சிப்பை பிரசங்கித்து, எரிக்கப்பட்டவர்!



(1487-1556)

கிறிஸ்துவின் மீது கொண்ட விசுவாசத்திற்காக பலியான மூன்று ஆக்ஸ்போர்டு பல்கலைகழக பண்டிதர்களில் இவரும் ஒருவர். விசுவாசமே நமது இரட்சிப்பு என்ற எழுச்சி பரவிய நாட்களில், 1524-ம் ஆண்டு ஹேக் லேடிமர் புதிய ஆங்கில வேதாகமம் மொழிபெயர்த்து பிரசுரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். இதற்கு ஏற்பட்ட எதிர்ப்பு தான் லேடிமரை பலி வாங்கியது. புதிய ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பை அந்த நாட்களுக்கு சில வருடங்களுக்கு முன்புதான் வில்லியம் டிண்டேல் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடு தடை செய்யப்பட்டிருந்தது.

ஆகவே 1528-ம் ஆண்டு, லேடிமர் அவர்கள் தாமஸ் உல்சே முன்பாக விசாரணைக்கு நிறுத்தப்பட்டார். அந்த கத்தோலிக்க அதிகாரி, கடுமையான எச்சரிப்பையும், காலக்கெடுவையும் நியமித்து லேடிமரை அனுப்பிவிட்டார். 1554-ம் ஆண்டு லேடிமரும், ரிட்லே என்ற வாலிபனும், கிரென்மர் என்ற பக்தனும் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்கள். அங்கு அவர் 'கத்தோலிக்க மாஸ்- மெய்யான கிறிஸ்துவின் பிரசன்னம்' என்ற உபதேசத்தை வேத வசனத்திற்கு புறம்பானது என்று கூறி, உறுதியாக மறுத்தார். விசாரணை குழுவிலிருந்தவர்கள் "கத்தோலிக்க தந்தைகள் கொண்டு வந்த அதே விசுவாசத்தை நீங்கள் ஏன் மறுக்கிறீர்கள்?" என கூறினர். அதற்கு லேடிமர் "அவர்கள் வேதத்தின்படி சரியாக சொல்லியிருந்தால் 'அதே விசுவாசத்தை' நானும் பின்பற்றுவேன்! மற்றபடி அல்ல" என கூறிவிட்டார். சுவிசேஷத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளும் புரோட்டஸ்டண்ட் குழுவினர் 'ஆத்தும இரட்சிப்பை' வாஞ்சிக்கிறார்கள் என்பதை லேடிமர் விசுவாசித்தார். சுவிசேஷத்தின் மீது கொண்ட விசுவாசமே ஒருவனை இரட்சிக்கவோ, ஆக்கினைக்குள்ளாக தீர்க்கவோ முடியும் என்ற விசுவாசத்தில் லேடிமர் மிக உறுதியாக இருந்தார். இதனிமித்தமாய், அப்போது கத்தோலிக்க மேரி இளவரசி-I கட்டளையிட்டு, லேடிமரையும், நிக்கோலஸ் ரிட்லேயையும் கம்பத்தில் கட்டி எரிக்க உத்திரவிட்டார். மரிப்பதற்கு முன்பாக, "விசுவாசத்தின் உறுதியை இந்நாள் வரைக்கும் தந்த என் தேவனுக்கு மனதார நன்றி சொல்லுகிறேன்! என் மரணத்தின் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக!" என கூறி பலியானார்.

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## சபை பாடல் மற்றும் ஜெப நேரம் புறக்கணிப்பது தவறு!

ஒரு நாள் ஜியார்ஜ் முல்லர் தனது பள்ளி தோழன் "பெட்டா" என்பவனைச் சந்தித்தார். தான் ஒரு வேதபாட வகுப்புக்கு ஒழுங்காகச் சென்று கொண்டிருப்பதாகவும், அது மனதிற்கு மிகவும் சமாதானம் அளிப்பதாகவும் பெட்டா என்ற அந்த நண்பன் ஜார்ஜ் முல்லரிடம் கூறி அவரையும் வேதபாட வகுப்புக்கு வரும்படி அன்புடன் அழைத்தான். அந்த வேதபாட வகுப்புகளானது, பெட்டா என்ற அந்த வாலிபனின் வியாபார நண்பன் "வாக்னர்" என்பவரின் வீட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அந்தக் குறிப்பிட்ட நாளில் அதாவது ஒரு சனிக்கிழமை பெட்டா தனது பள்ளி நண்பன் ஜியார்ஜ் முல்லரை அழைத்துக்கொண்டு வாக்னர் என்ற தனது வியாபார நண்பனின் வீட்டில் நடைபெறும் வேதபாட வகுப்புக்குச் சென்றார். பெட்டாவுக்கும், முல்லருக்கும் அன்பு நிறைந்த வரவேற்பு வாக்னர் வீட்டில் கிடைத்தது.

முதலாவதாக, அங்கு பக்தி பரவசம் நிறைந்த இனிமையான பாடல் ஒன்று குழுவாகப் பாடப்பட்டது. அதைத் தொடர்ந்து வேதபாடம் வாசிக்கப்பட்டு, வந்திருந்தோர் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். பாடல் நேரமும், ஜெப வேளையும் முடிந்த பிறகுதான், வேதபாட வகுப்பு துவங்கியது! கூடியிருந்த அனைவரும் அத்தனை பக்தியோடு பாடல்கள் பாடி மகிழ்ந்து ஜெபித்தார்கள்! பரவசமான பாடல் வரிகளும் அந்த கிருபை நிறைந்த ஜெபங்களும்தான் முல்லரின் பாவ இருதயத்தை அதிகமாகத் தொட்டது! அன்று தன்னை கிறிஸ்துவுக்கு ஒப்புவித்த முல்லர், மாபெரும் தேவமனிதனாய் வளர்ந்து, தனது ஊழியத்தின் மூலமாய், தேவனை மகிமைப்படுத்தினார்! கிறிஸ்தவ கூட்டங்களில், 'பாடல் நேரத்தையும்' 'ஜெப நேரத்தையும்' அற்பமாக எண்ணி, கூட்டத்திற்கு தாமதமாய் வருபவர்கள், ஒருவேளை தங்களின் பெரிய ஆசீர்வாதங்களை இழந்திடும் வாய்ப்புகூட இருக்கிறது!

மிகுந்த பக்தியோடு ஏறெடுக்கும் பாடல்கள், ஜெபங்கள்கூட 'பாவியாகிய ஒரு ஆத்துமாவை' சந்தித்து மனம் மாறச் செய்திடும்! இவ்வித பாக்கியத்தை கருதி, 'குறிப்பாக' வாலிப பிள்ளைகளை சபை ஆரம்பத்திலேயே அழைத்து வந்து அமர வைப்பது பெற்றோரின் தலையாய கடமையாய் மாறக்கடவது!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.